வாக்களிக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. எல்லாக் கல்லூரிகளிலும் அமைதியான முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படு கிறது என்றாலும், சில இடங்களில் சச்சரவுகள் ஏற்பட்டுவிடுகின்றன.

திரு. எம். ஆறுமுகசாமி : தலைவரவர்களே, பெரும்பான்மையான மோதல் கள் எதன் காரணமாக நிகழ்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கூறுவார் களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பத்திரிகை களிலே வருகின்ற செய்திகளைப் பார்க்கின்றபோது, பெரும்பான்மையான மோதல்கள் கட்சி மாச்சரியங்கள் காரணமாகத் தான் ஏற்படுகின்றன என்று கொள்ள வேண்டும்.

Selection Grade Scales of pay.

* 222 Q.—THIRU S. MUTHUSWAMY (on behalf of T :)x§ G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether it is a fact that some graduate teachers, who have served for more than 20 years, have not received any benefit in their pay under the pay scales for Selection Grade fixed as per the latest order of the Government; and

(b) if so, the action proposed to be taken by the Government?

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தேர்வுத்தர சம்பள விதங்கள்

திரு. செ. முத்துசாமி (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றியுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் அரசு அண்மையில் பிறப்பித்த ஆணையையொட்டி தேர்வுத் தர ஆசிரியர்களுக்காக முடிவு செய்த சம்பள விதங்களின் கீழ் தங்கள் சம்பள விதத்தில் பயன் எதையும் பெறவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அரசு மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இரண்டாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பட்டதாரி ஆசிரியர்கள் ஊதிய விகிதமும், தேர்வு நிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் ஊதிய விகிதமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவ்விகிதங்களை மாற்றும் கருத்துருவேதும் இப்போது இல்லை.

ஒரு மட்டத்தில் இரண்டு ஊதிய விகிதங்களும் ஏறக்குறைய சமமாக இருப்பதால், நீண்டகாலம் சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்களில் சிலருக்கு தேர்வு நிலையில் பயன் இல்லாமல் போய்விடுகிறது. இதைத் தவிர்க்க அவர்களது ஊதியத்தை எப்படி நிர்ணயிப்பது என்பது ஆராயப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், 275 ரூபாய் சம்பள விகிதம் இருந்தபோது, செலக்ஷன் கிரேடுக்கு 400 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது சம்பளக் குழுவின் சிபார்சைப் பரிசீலித்த தனி நபர் குழு சிபார்சின்படி, அடிப்படைச் சம்பளம் 300 ரூபாயாக உயர்த்தப்பட்டது. ஆனால் செலக்ஷன் கிரேடு சம்பளம் மட்டும் மாற்றப்படாமல் விடப்பட்டுவிட்டது. செலக்ஷன் கிரேடு அடிப்படைச் சம்பளத்தை, பட்டதாரி ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளத்தை மாற்றியதற்கு ஏற்ப, மாற்ற அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதைத் தான் நான் குறிப்பிட்டேன். ஒரு மட்டத்தில் இரண்டு ஊதிய விகிதங்களும் ஏறக்குறைய சமமாக இருப்பதால், நீண்டகாலம் சேவை செய்த பட்டதாரி ஆசிரியர்களில் சிலருக்கு தேர்வு நிலையில் பயனில்லாமல் போய்விடுகிறது. இதைத் தவிர்க்க அவர்களது ஊதியத்தை எப்படி நிர்ணயிப்பது என்பதுபற்றி அரசு யோசித்துக்கொண்டிருக்கிறது. அதுபற்றி முடிவெடுக்கும்.

(பிற்பகல் 4-10)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மற்ற துறைகளிலே இந்த மாதிரிப் பதவி உயர்வு கொடுக்கும்போது எப்.ஆர். 22 (1) (பி) என்ற விதிப்படி இரண்டு 'நோஷனல் இன்கிரிமென்ட்' கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே வாங்கிய சம்பள விகிதத்தில் ஒரு இன்கிரிமென்டும், புதிதாகச் சேரும் பதவிக்கான சம்பள விகிதத்தில் ஒரு இன்கிரிமென்டுமாக இரண்டு ஊதிய உயர்வுகள் தரப்படுகின்றன. இதே சலுகையை 'செலக்ஷன் கிரேடு'-க்கு வருகிற ஆசிரியர்களுக்கும் அளிக்க அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்புகள் என்னிடம் இல்லை. அதுபற்றித் தனியாகத்தான் ஆராய வேண்டும்.

Construction of a girls Wing for Chromepet Government (Board High School.

* 223 Q.—THIRU KATTOR GOPAL (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether any building grant for the construction of a Girls Wing for Chromepet Government (Board) High School, has been sanctioned; and

(b) if so, whether the work has been started?

குரோம்பேட்டை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு பெண்கள் பிரிவு ஒன்று கட்டுதல்.

திரு. காட்டூர் கோபால் (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) குரோம்பேட்டை அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிக்கு, பெண்கள் பிரிவு ஒன்று கட்டுவதற்காகக் கட்டிட மானியத்திற்கு அரசு அனுமதி வழங்கப் பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Allowance given to Technically Qualified Typists.

* 224 Q.—THIRU KATTOOR GOPAL (on behalf of) THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Education be pleased to state whether the allowance of Rs. 25 given to technically qualified Typist in Government Schools is payable to Aided School Typist also having the same qualification?